பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 07 2026 SATURDAY 6.30 PM

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) 72-ஆவது தேசிய திரைப்பட விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழில் சிறந்த படமாக ராயன் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2) விளையாட்டுத்துறைக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3) குடிமைப்பணியில் சேர விரும்பும் இளைஞர்கள் மக்கள் நலப்பணிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.

4) எல்-நினோ தாக்கத்தால் தமிழகத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

5) ஆசிய Age Group நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<>>>>>

72-ஆவது தேசிய திரைப்பட விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழில் சிறந்த திரைப்படமாக ராயன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மெய்யழகன் படத்திற்கு சிறந்த ஒலி கலவைக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கேப்டன் மில்லர் படத்தில் நடித்த தனுஷிற்கு சிறப்புப் பிரிவில் சிறந்த நடிகருக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அமரன் படத்திற்கு இசையமைத்த ஜி வி பிரகாஷுக்கு சிறந்த பின்னணி இசைக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் சிறந்த திரைப்பட விமர்சகருக்கான விருது திரு சஞ்ஜீவ் ஸ்ரீவத்சவா-விற்கு வழங்கப்படுகிறது.

<<<<<>>>>>

விளையாட்டுத்துறையை மேம்படுத்த பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உள் விளையாட்டு அரங்கை இன்று திறந்துவைத்து பேசிய அவர், கிராமப்புற மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

விளையாட்டு வீரர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்துதர மத்திய அரசு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

*(Sound Byte – நிர்மலா - 54 Sec. )*

<<<<<>>>>>

குடிமைப்பணியில் சேருவதற்கு ஆர்வம் உள்ள இளைஞர்கள் மக்களுக்கான பணிகளை நிறைவேற்ற தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் தனியார் குடிமைப்பணி பயிற்சி நிறுவனத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், அரசின் நலத்திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்பதில் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு நாம் பயணிக்க வேண்டும் என்றும் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

எல்-நினோ வெப்ப அலை தாக்கம் காரணமாக, உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேவையான அளவுக்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

டெல்டா மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லை, மற்ற மாவட்டங்களில் உள்ள ஆலைகளில் உமி நீக்கி அரிசியாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த குறுவை மற்றும் சம்பா பருவங்களில் தேக்கமடைந்துள்ள நெல் மூட்டைகள் விரைவில் மற்ற மாவட்டங்களில் உள்ள அரவை ஆலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சேமிப்புக் கிடங்குகளின் பற்றாக்குறையை சமாளிக்க ரயில்வேக்கு சொந்தமான காலி இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு வெங்கடரமணன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மாநில அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தை மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் இன்று மதுரையில் திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மையத்தின் மூலம் மாற்றுதிறனாளிகளுக்கு அனைத்து சேவைகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இந்த மையத்தின் மூலம் ஆக்குபேஷனல் தெரபி, பிசியோதெரபி, பார்வை மற்றும் காது கேளாமை குறைபாடுகளுக்கான சிகிச்சை Speech தெரபி போன்றவை மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

உளவியல் ஆலோசனை, அடையாள அட்டை பெறுவது, உதவித்தொகை மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளுக்கு விண்ணப்பித்தல் போன்ற சேவைகளும் இந்த மையத்தின் மூலம் செய்துதரப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளின் வேலைவாய்ப்புக்கு வழிகாட்டும் சேவையும் இம்மையத்தின் மூலம் வழங்கப்படும் என்று திரு நிர்மல் குமார் கூறினார்.

<<<<<>>>>>

பத்திரப்பதிவுத்துறையில் கடந்த ஆட்சியின்போது இருந்த ஊழல் களையப்பட்டு தற்போது சீரமைக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு லோகேஷ் தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழனி திருக்கோவில் நில விவகாரம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும், இதுகுறித்து அரசு சார்பில் உரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பத்திரப்பதிவுத்துறையில் உள்ள குறைகள் ஒவ்வொன்றாக சரி செய்யப்பட்டு வருவதாகவும், புகார்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு லோகேஷ் தமிழ்செல்வன் கூறினார்.

<<<<<>>>>>

மாநிலத்தில் சட்டம் – ஒழுங்கை நிலைநாட்ட தவெக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் தொடர்ந்து குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும், அதனை தடுக்க இயலாமல் ஆட்சியாளர்கள் திணறுவதாகவும் கூறியுள்ளார்.

மாற்றம் கொண்டுவருவோம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சியை பிடித்த தவெக, மக்கள் பயன்பெறும் வகையில் எந்தவொரு மாற்றத்தையும் கொண்டுவரவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த ஏழு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

*(Sound Byte – வி ஆர் துரை – 35 Sec. )*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நெல்லை மாவட்டம், நாங்குனேரி, ராதாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்றவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மாநில நிதியமைச்சர் திரு. மரியவில்சன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட செயற்கை இழை ஹாக்கி மைதானத்தை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா இன்று திறந்து வைத்தார்.

-----------

சென்னை தரமணியில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவில், மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் பரிசுகளை வழங்கினார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஏலகிரி மலையில் கோடை விழாவினை மாநில வன அமைச்சர் திரு ரஞ்சித் குமார் இன்று தொடங்கி வைத்தார்.

---------------

திருவள்ளூர் மாவட்டத்தில் இ-சேவை மையங்களின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் திருமதி கவிதா நேரில் ஆய்வு செய்தார்.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கடல்சார் பயிற்சிக்கழகத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் குறித்து ஆட்சியர் திரு விஷ்ணு மகாஜன் இன்று ஆய்வு செய்தார்.

---------------

செங்கல்பட்டு அருகே 2 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் தீயிட்டு அழிக்கப்பட்டது.

----------------

சேலம் - கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் நின்று கொண்டிருந்த லாரி மீது, கார் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய Age Group நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 200 மீட்டர் பிரிவில் Dhinidhi Desinghu தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 50 மீட்டர் பிரிவில் Tanishi Gupta வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------------

ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெறவுள்ள ஆசிய இளையோர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய அணி இன்று தில்லியிலிருந்து புறப்பட்டு சென்றது.

இப்போட்டி வரும் 20-ஆம் தேதி முதல், 25-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

<<<<<>>>>>